ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 7.8 – செங்கமலம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 7.8 – செங்கமலம்

‡ செங்கமலத் திருமகளும் புவியும் ⋆
செம் பொன் திருவடியின் இணை வருட முனிவர் ஏத்த ⋆
வங்க மலி தடங்கடலுள் அனந்தன் என்னும் ⋆
வரி அரவின் அணைத் துயின்ற மாயோன் காண்மின் ⋆
எங்கு மலி நிறை புகழ் நால் வேதம் ⋆
ஐந்து வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை ⋆
அங்கமலத்தயன் அனையார் பயிலும் செல்வத்து ⋆
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ‖ **7.8.1** ‖

முன் இவ்வுலகேழும் இருள் மண்டி உண்ண ⋆
முனிவரொடு தானவர்கள் திசைப்ப ⋆
வந்து பன்னு கலை நால் வேதப் பொருளை எல்லாம் ⋆
பரி முகமாய் அருளிய எம் பரமன் காண்மின் ⋆
செந்நெல் மலி கதிர்க் கவரி வீசச் ⋆
சங்கம் அவை முரலச் செங்கமல மலரை ஏறி ⋆
அன்னம் மலி பெடையோடும் அமரும் செல்வத்து ⋆
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ‖ **7.8.2** ‖

குலத்தலைய மத வேழம் பொய்கை புக்குக் ⋆
கோள் முதலை பிடிக்க அதற்கனுங்கி நின்று ⋆
நிலத்திகழும் மலர்ச் சுடரேய் சோதீ ! என்ன ⋆
நெஞ்சிடர் தீர்த்தருளிய என் நிமலன் காண்மின் ⋆
மலைத்திகழ் சந்தகில் கனகமணியும் கொண்டு ⋆

வந்துந்தி வயல்கள் தொறும் மடைகள் பாய ⋆
அலைத்து வரும் பொன்னி வளம் பெருகும் செல்வத்து ⋆
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ॥ **7.8.3** ॥

சிலம்பு முதல் கலன் அணிந்தோர் செங்கண் குன்றம் ⋆
திகழ்ந்ததெனத் திரு உருவம் பன்றி ஆகி ⋆
இலங்கு புவி மடந்தை தனை இடந்து புல்கி ⋆
எயிற்றிடை வைத்தருளிய எம் ஈசன் காண்மின் ⋆
புலம்பு சிறை வண்டொலிப்பப் பூகம் தொக்க ⋆
பொழில்கள் தொறும் குயில் கூவ மயில்கள் ஆல ⋆
அலம்பு திரைப் புனல் புடை சூழ்ந்தழகார் செல்வத்து ⋆
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ॥ **7.8.4** ॥

சினமேவும் அடல் அரியின் உருவம் ஆகித் ⋆
திறல் மேவும் இரணியனதாகம் கீண்டு ⋆
மனமேவு வஞ்சனையால் வந்த பேய்ச்சி மாள ⋆
உயிர் வவ்விய எம் மாயோன் காண்மின் ⋆
இனமேவு வரி வளைக்கை ஏந்தும் ⋆
கோவை ஏய்வாய மரகதம் போல் கிளியின் இன் சொல் ⋆
அனமேவு நடை மடவார் பயிலும் செல்வத்து ⋆
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ॥ **7.8.5** ॥

வானவர் தம் துயர் தீர வந்து தோன்றி ⋆
மாண் உருவாய் மூவடி மாவலியை வேண்டி ⋆
தான் அமர ஏழ் உலகும் அளந்த வென்றித் ⋆
தனி முதல் சக்கரப் படை என் தலைவன் காண்மின் ⋆
தேன் அமரும் பொழில் தழுவும் எழில் கொள் வீதிச் ⋆
செழு மாட மாளிகைகள் கூடம் தோறும் ⋆

ஆன தொல் சீர் மறையாளர் பயிலும் செல்வத்து ⋆
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ॥ **7.8.6** ॥

பந்தணைந்த மெல் விரலாள் சீதைக்காகிப் ⋆
பகலவன் மீதியங்காத இலங்கை வேந்தன் ⋆
அந்தம் இல் திண் கரம் சிரங்கள் புரண்டு வீழ ⋆
அடு கணையால் எய்துகந்த அம்மான் காண்மின் ⋆
செந்தமிழும் வட கலையும் திகழ்ந்த நாவர் ⋆
திசை முகனே அனையவர்கள் செம்மை மிக்க ⋆
அந்தணர் தம் ஆகுதியின் புகை ஆர் செல்வத்து ⋆
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ॥ **7.8.7** ॥

கும்பமிகு மத வேழம் குலையக் கொம்பு பறித்து ⋆
மழ விடை அடர்த்துக் குரவை கோத்து ⋆
வம்பவிழும் மலர்க் குழலாள் ஆய்ச்சி வைத்த ⋆
தயிர் வெண்ணெய் உண்டுகந்த மாயோன் காண்மின் ⋆
செம் பவள மரதகம் நல் முத்தம் காட்டத் ⋆
திகழ் பூகம் கதலி பல வளம் மிக்கெங்கும் ⋆
அம்பொன் மதிள் பொழில் புடை சூழ்ந்தழகார் செல்வத்து ⋆
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ॥ **7.8.8** ॥

ஊடேறு கஞ்சனொடு மல்லும் வில்லும் ⋆
ஒண் கரியும் உருள் சகடும் உடையச் செற்ற ⋆
நீடேறு பெருவலித் தோள் உடைய வென்றி ⋆
நிலவு புகழ் நேமி அங்கை நெடியோன் காண்மின் ⋆
சேடேறு பொழில் தழுவும் எழில் கொள் வீதித் ⋆
திருவிழவில் மணி அணிந்த திண்ணை தோறும் ⋆

ஆடேறு மலர்க் குழலார் பயிலும் செல்வத்து ⋆
அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே ॥ **7.8.9** ॥

‡ பன்றி ஆய் மீன் ஆகி அரி ஆய்ப் ⋆
பாரைப் படைத்துக் காத்துண்டுமிழ்ந்த பரமன் தன்னை ⋆
அன்றமரர்க்கதிபதியும் அயனும் சேயும் அடி பணிய ⋆
அணி அழுந்தூர் நின்ற கோவை ⋆
கன்றி நெடுவேல் வலவன் ஆலி நாடன் ⋆
கலிகன்றி ஒலி செய்த இன்பப் பாடல் ⋆
ஒன்றினொடு நான்கும் ஓர் ஐந்தும் வல்லார் ⋆
ஒலி கடல் சூழ் உலகாளும் உம்பர் தாமே ॥ **7.8.10** ॥

அடிவரவு — செங்கமலம் முன் குலம் சிலம்பு சினம் வானவர் பந்து கும்பம் ஊடேறு பன்றி கள்ளம்

செங்கமலம் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்